இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,581 — SEPTEMBER 19, 1913.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[By-laws under the Rural Schools Ordinance, made by the District School Committee of Kegalla.]

பெரிய பிரித்தானியாவும் அயர்லாந்தும் சேர்ந்துள்ள இராச்சியத்துக்கும் கடலுக்கப்பாலுள்ள பிரித்தானிய ஆதிபத்திய நாடுகளுக்கும் அரசரும் சமயபாதுகாவலருமாகிய மகத்துவம்பொருந்திய ஐந்தாம் ஜோர்ஜ் அரசரின்பேரில் அறிக்கைப்பத்திரம்:

இலங்கையையும் உபராட்சியங்களினும் ஆளுகை நடப்பிக்கிறவராகிய கனம் றெஜிநோல்ட் எட்வாட் ஸ்டப்ஸ் இவரால் செய்யப்படும்

## விளம்பரம்.

ஆர். ஈ. ஸ்டப்ஸ்,

கேகல்லே டிஸ்திறிக்கின் பள்ளிக்கூடச்சங்கத்தாரால் 1907 ம் ஆண்டு 19 ம் பிரிவாகிய நாட்டுப்பள்ளிக்கூடச்சட்டத்துக்கு இசையச் சில உபவிதிகள் உண்டாக்கப்பட்டு மேற்குறித்தச்சட்டத்து 20 ம் இலக்கம் 2 ம் பிரிவிற்கிசைய முறைமையாகப் பெலப்படுத்தப்பட்டு 1909 ம் ஆண்டு மெய்மாதம் 22 ந் திகதியின் பிரசித்த பத்திரத்தால், 1909 ம் ஆண்டு மேய் மாதம் 28 ந் திகதி "கெசெற்" பத்திரத்தில் பிரசித்தப்படுத்தப்பட்டது. குறித்த டிஸ்திறிக் ஸ்கூல் கொமிட்டியார் குறித்த உபசட்டங்களை அழித்து அதற்குபதிலாக வேறு உபசட்டங்களை உண்டாக்கினார்கள்.

இலங்கை ஆளுகை நடப்பித்துவருகிற நாம் சொல்லப்பட்ட சட்டத்தின் 20 ம் பிரிவின் 2 ம் உட்பிரிவினால் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு அதிகார சபையாரின் ஆலோசனையோடும் குறித்த 1909 ம் வருடம் மேமாதம் 22 ந் திகதியின் துணைச்சட்டத்தை அழித்ததை உறுதிப்படுத்துகிறோம். குறித்த டிஸ்திறிக் கொமிட்டியால் உண்டாக்கப்பட்டு இத்துடன் அணைக்கப்பட்டு இருக்கும் செடூலில் காட்டிய உபசட்டங்களை ஸ்திரப்படுத்துகிறோம்.

எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதின்மூன்றும் ஆண்டு செப்றெம்பர் (புரட்டாதி) மாதம் பன்னிரண்டாந் திகதி இலங்கைத்தீவின் கொழும்புப் பட்டணத்தில் கொடுக்கப்பட்டது.

அதியுத்தமனார் கட்டளைப்படி,

எல். டபிள்யு. பூத்,

அக்றிங் கொலோனியல் சக்கிடுத்தார்.

கடவுள் இராசாவை காப்பாற்றுவாராக.

---

## உபவிதிகள்.

1907 ம் ஆண்டின் கிராமப்பள்ளிக்கூட கட்டளைச்சட்டத்தின் 19 ம் 20 ம் பிரிவுக்கமைய, கேகாலைப் பள்ளிக்கூடப் பிரிவின் சங்கத்தாரால் பள்ளிக்கூடக் குறிச்சிக்கென ஏற்படுத்தப்பட்ட துணைப்பிரமாணங்கள் :—

1. இந்த உபவிதிகளில்—" பையன் " " பெண்பிள்ளை பிள்ளை " என்னும் சொற்கள் கேகாலைப் பள்ளிக்கூடப் பிரிவுக்குள் வசிக்கும் ஒரு பையனை அல்லது பெண்பிள்ளை அல்லது ஒரு பிள்ளையைக் கருதுகின்றது.

" பெற்றோர் " என்னுஞ் சொல்லு பிள்ளையைக் காப்பாற்றுகிறவரை அல்லது பிள்ளையைத் தன்வசம் வைத்திருக்கும் எவரையுங் கருதும்.

" சட்டம் " என்னுஞ் சொல் இலங்கைக் காரிக சபையில அதியுத்தம தேசாதிபதியால் அரசினர் சகாயம்பெறும் பாடசாலைகளை நடத்துவதற்காக ஏற்படுத்தி யுத்தரவழித்த அதாரம் வழங்கும் கட்டளைச்சட்டத்தைக் கருதும்.

" வரவு " என்னும் சொல் சட்டத்தால் விதிக்கப்பட்ட பிரகாரம் வரவிடாப்பில் பதித்த முழுவரவைக்கொண்டதாய் சட்டத்தால் கூறப்பட்ட காலத்தின் வரவைக் கருதும்.

" பாடசாலை " என்னும் சொல் இதனடியில் அணைத்திருக்கும் இடாப்பில் வகுத்துறைத்திருக்கும் பாடசாலை எதொன்றையுங் கருதும்.

" ஒரு பிள்ளையைப் படிப்பிப்பதற்குப் போதிய தகுதியான வழிவகை " அல்லது " நியாயமான சாட்டு " என்னும் வாக்கியங்கள் (கவுரவ) 1907 ம் ஆண்டின் உள்நாட்டுப் பாடசாலைகளைப்பற்றிய விதிப்பிரமாணத்தகுக நேர்ப்பிரிவு 20 (1) (b) யில் கொடுத்திருக்கும் அர்த்தத்தைக் கருதும்.

" பாடசாலை இன்ஸ்பெக்டர் " என்னுஞ் சொல் உத்தம தேசாதிபதியவர்களால் நியமிக்கப்பட்டு பாடசாலைகளைப் பரீட்சிக்கும் இன்ஸ்பெக்டரைக் கருதும்.

2. ஆறு வயதுக்குக் குறையாததும் பன்னிரண்டு வயதுக்கு மேற்படாத வயதுள்ள ஒவ்வொரு பிள்ளையினதும் பெற்றோர் கல்விப்பயிற்சிக்குப் போதிய தும் பொருத்தமுமான ஒழுங்குகள் பண்ணினாலொழிய அல்லது பள்ளிக்கூடத்துக்கு வராதிருக்க நியாயமான மன்னிப்பிருந்தாலொழிய அப்படிப்பட்ட பிள்ளை இத்துடனிணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விவரித்திருக்கும் பள்ளிக்கூடமொன்றில் சேர்ந்து படிக்கப்பண்ணவேண்டும். மூன்று மயிலுக்கு அப்பாலிருக்கும் பள்ளிக்கூடத்துக்குப் போகும்படி ஒரு பையனையும் வலோற்காரஞ்செய்யப்படமாட்டாது. ஓர் பெண்பிள்ளையை 1½ மயிலுக்கப்பாலிருக்கும் பள்ளிக்கூடத்துக்குப் போகும்படிசெய்யக்கூடாது. விசேஷமான காரியங்களில வீட்டில் பெண்பிள்ளைகள் நிற்பது அவசியமென்று கண்டால் அவர்களை விடுதலைக்கப்படும்.

3. ஒவ்வொரு பிள்ளையினதும் பள்ளிக்கூடத்திற் படிக்கவேண்டிய நேரம், அப்படிக்கொத்த வயதான பிள்ளைகளின் கல்விப்பயிற்சிக்காகச் செலுத்தப்படும் முழுநேரமாகவேயிருக்கும்.

4. இந்த உபவிதியின் ஏற்பாடு யாதொன்றும்:—

(a) 1907 ம் ஆண்டின் உள்நாட்டுப் பாடசாலைகளைப்பற்றிய விதிப்பிரமாணத்தக்கு 21 (d) ம் பிரிவின் பிரகாரம் மார்க்கவிஷய பாடங்கள் படிப்பிக்கும்போது பிள்ளைகளை வகுப்பிவில்லாமல் போகும்படி யுத்தரவுகொடுக்கத்தடையாகாது

(b) ஒரு பிள்ளையின் பெற்றோர் அனுசரிக்கிற மார்க்கத்தாரவர்களால் அம்மார்க்க கிரிகை, வந்தனை, வணக்கத்துக்காக முற்றாக நியமித்திருக்கும் பெருநாட்டினத்தில் பாடசாலைக்கு வரும்படி அப்பிள்ளையைக் கட்டாயப்படுத்தவும் மாட்டாது.

5. மேலும் ஒர் குறிச்சியின் கிராமக்கொம்மிற்றி அக்கிராசனர் திருப்திக்கு நன்மையாய்ப் பிரயோகிக்கப்பட்டு அக்காலத்துக்கான சட்டத்தால் விதிக்கப்பட்ட 4 ந் தரத்தில் வாசகத்திலும், வாசனையிலும, கணக்கிலும், தேறிபெற்ற பிள்ளையென்று பாடசாலை இன்ஸ்பெக்ற ரொருவரிடஞ் செட்டிவிக்கற் என்னும் உறுதிப்பத்திரம் பெற்றிருக்கும் 10 ம் 12 ம் வயதுக்கிடையிலுள்ள பையனை அல்லது பெண்பிள்ளையை பாடசாலைக்கு வரும்படி கட்டாயஞ்செய்யப்பட மாட்டாது

6. இவ்வுபவிதிகளை அல்லது இதில் எதனையேனும் அனுசரியாத அல்லது அசட்டைபண்ணும், அல்லது மீறும் ஒவ்வொரு பெற்றோரும் குற்றவாளியாகிறபோது ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் 20 ரூபாவிற்கு மேற்படாத தண்டனைக்கும், பின்னும் கட்டளைக்கமையாமற் குற்றத்தையே தொடர்ந்து செய்துநின்றால் நாளொன்றுக்கு 2 ரூபாய்க்கு மேற்படாத மேலதிகமான தண்டனைக்கும் உள்ளாவார்.

குறிப்பு.—இந்த உபவிதிகளின் 1 ம் 4 ம் பிரிவுகளில் சுட்டிச்சொல்லிய கிராமப்பாடசாலை விதிப்பிரமாணத்தின் பாகங்கள் பின்வருவனவே:—

20 ம் உற்ப்பிரிவு (1) (*b*)—ஒரு தந்தை, உதவி நன்கொடை பெறுதற்காய்ப் பிரசித்த வித்தியாகர்த்தரால் பதியப்பட்ட ஒரு பள்ளிக்கூடத்துக்கு அல்லது உதவி நன்கொடைக்காக விண்ணப்பப்பத்திரம் ஆலோசனையிலிருக்கும் ஒரு பள்ளிக்கூடத்துக்கு, அல்லது போதியதும் பொருத்தமுமான கலவிப் பயிற்சிகொடுக்க பிரசித்த வித்தியாகர்த்தரால் அனுமதிக்கப்பட்ட ஒரு பள்ளிக்கூடத்துக்கு தன் பிள்ளை சரியாய்ப் போய்வருகிறதென்று அத்தாட்சிப்படுத்தினால், அல்லது பிரசித்த வித்தியாகர்த்தர் போதியதும் பொருத்தமுமானதென்று அதிகாரம்பண்ணக்கூடிய வேறு ஒழுங்குகளைத் தன் பிள்ளையின் கல்விப் பயிற்சிக்குச் செய்துவைத்திருக்கிறதாக அத்தாட்சிப்பண்ணினால, அல்லது தன் பிள்ளை பள்ளிக்கூடத்திற்குக் கட்டாயமாகப் போகிறதிலிருந்து விலக்கப்படவேண்டுமென்று பிரசித்த வித்தியாகர்த்தர் அங்கீகாரம்பண்ணிய அதிகாரப்பத்திரமொன்றைக் காட்டினால், தன் பிள்ளையின் கலவிப்பயிற்சிக்காகப் போதியதும் பொருத்தமுமான ஒழுங்குபண்ணியிருக்கிறதாக எண்ணப்படுவான். ஆனாலும், அப்படிப்பட்ட பிள்ளையைப் பள்ளிக்கூடத்திற்குப்போகப் பண்ணுமலிருக்கிறதற்கான நியாயமான சாட்டு உண்டென்று அக்கிராசனர் திருப்திக்கு அத்தாட்சிப்பண்ணினால் அப்படிப்பட்ட பள்ளிகூடத்துக்குத் தன் பிள்ளையைப் போகவிடாமலிருக்கிறதற்காக எந்தப் பிள்ளையினது தகப்பனுங் குற்றவாளியாக்கப்படமாட்டான். ஒரு தந்தை தன்பிள்ளை வியாதியால் அல்லது தவிர்க்கேலாத காரணத்தால பள்ளிக்கூடத்துக்குப் போகிறதில் நின்று தடுக்கப்பட்டதாக அத்தாட்சிப்பண்ணினால், தன் பிள்ளையைப் பள்ளிக்கூடத்துக்குப் போகவிடாதிருக்க நியாயமான சாட்டுள்ளவனாக எண்ணப்படுவான்.

21 ம் பிரிவு—டிஸ்திறிக பாடசாலைச் சபையார் பின்வரும் விஷயங்களில் திருப்திப்பட்டாலொழிய மார்க்கவிஷய பாடங்கள் படிப்பிக்கப்படும் யாதாமொரு பாடசாலையும் சுதேசபாஷை படிப்பிக்கும் பொதுப்பாடசாலையெனக் கொள்ளப்படமாட்டாது, அதாவது :—

(*a*) மார்க்க விஷயத்துக்குரிய பாடங்கள் பள்ளிக்கூட நேர அட்டவணையிற் கண்டிருக்கும் மணித்தியாலங்களில் மாத்திரம் படிப்பிக்கப்படுவதும;

(*b*) மார்க்க விஷய பாடங்கள், பள்ளிக்கூட மார்க்கத்தைச்சேர்ந்த மாணுக்கரைத் தவிர மற்ற மார்க்கத்தாருக்குப் பெற்றார் தடுக்கில் படிப்பியாதுவிடுவதும்;

(*c*) மார்க்கவிஷய பாடங்கள் படியாத பிள்ளைகளை அதற்கென்று நியமித்திருக்கும் நேரத்தில் வேறு பாடங்கள் படிக்க நியமித்துவிடுவதும்;

(*d*) வேறு மார்க்கத்துப் பிள்ளைகள் மார்க்கவிஷய பாடங்கள் படிப்பிக்கும்போது படிப்பிக்கு மறையில் அங்கே யிருப்பதறகு அவர்களின் பெற்றார் தடைசொன்னால், அப்பிள்ளைகளை அந்த மணித்தியாலத்தில் பாடசாலையின் வேறோர் பக்கத்திலிருக்க, அலலது அப்பாடம் படிப்பித்து முடியும்வரைக்கும் பள்ளிகூடத்தை விட்டு வெளியே போய் நிறகலாமென்று உத்தரவுகொடுப்பதும்;

(*e*) இந்தப் பிரதியொன்று இங்கிலீஸ், சிங்களம், தமிழ் என்னும் பாஷைகளில் பாடசாலையில் எல்லாருக்குந் தெரியக்கூடிய முகப்பொன்றில் தூக்கிவைப்பதும்;

ஆகிய இவைகளே—மேலேகண்ட உபவிதிகள்; டிஸ்திறிக் பாடசாலைக் கொம்மிற்றியாரால் 1913 ம் ஆண்டு பங்குனிமாதம் 29 ந் திகதி கூடிய சங்கத்தில இயற்றப்பட்டன.

(கையொப்பமிட்டது) எச். டபிள்யு. கொட்றிங்டன்,
அக்கிராசனர்.

---

அட்டவணை.

| பள்ளிக்கூடத்தின் பெயர். | அரசாட்சி அல்லது அரசினரது சகாயம்பெறும். | ஆருடைய பராபரிப்புக்குக் கீழ். |
|---|---|---|
| | கன்பொட கோறளை. | |
| மாவனல்ல ஆண் | .. அரசாட்சி .. | — |
| மாணிககாவ ஆண் | .. டிை .. | — |
| மாணிககாவ பெண் | .. டிை .. | — |
| கணேதன்னே ஆண் | .. டிை .. | — |
| பெத்தேவெல ஆண் | .. டிை .. | — |
| பெத்தேவெல பெண் | .. டிை .. | — |
| வாகிரிகழ ஆண் | .. டிை .. | — |
| உதுவன்கந்த பெண் | .. அரசினரது சகாயம்பெறும் | ரோமன் கத்தோலிக் |
| தன்கமுவை கலவன் | .. டிை .. | வெஸ்லியன் |
| மாவனல்லை பெண் | .. டிை .. | சி. எம். எஸ். |
| | கினிகொட கோறளை. | |
| தெவிவெல ஆண் | .. அரசாட்சி .. | — |
| தெவிவெல பெண் | .. டிை .. | — |
| உடஹின்குறுவக ஆண் | .. டிை .. | — |
| மொளகொட ஆண் | .. டிை .. | — |
| இரம்புக்கன ஆண் (பின்னவல) | டிை .. | — |
| பெட்டியேகம கலவன் | .. டிை .. | — |
| தொம்பேமடை ஆண் | .. டிை .. | — |
| இரம்புக்கன பெண் | .. அரசினரது சகாயம்பெறும் | ரோமன் கத்தோலிக் |
| மாடையியாவ கலவன் | .. டிை .. | டிை |
| ஹேவாதிவல கலவன் | .. டிை .. | சி. எம். எஸ். |
| தீவெல கலவன் | .. டிை .. | டிை |
| உடுவேவழ கலவன் | .. டிை .. | டிை |
| குடாகம கலவன் | .. டிை .. | டிை |
| சியம்பழன்கொமுவை கலவன் | டிை .. | சல்வேசன் ஆர்மி |
| | மாவதபத்துவ. | |
| மாகூறே ஆண் (செட்டிமுல்ல) | அரசாட்சி .. | — |
| கெஹெல்வத்த ஆண் | .. டிை .. | — |
| இராவழ கலவன் | .. அரசினரது சகாயம்பெறும் | சி. எம். எஸ். |
| | கந்துவஹபத்து. | |
| மாபோபிட்டிய ஆண் | .. அரசாட்சி .. | — |
| வொசல்லை ஆண் | .. டிை .. | — |
| உந்துகொடை பெண் | .. அரசினரது சகாயம்பெறும் | ரோமன் கத்தோலிக் |
| | தும்பழாத்தபத்து. | |
| மாவதுகொடை ஆண் | .. அரசாட்சி .. | — |
| ஹெம்மட்டகம ஆண் | .. டிை .. | — |
| அன்பிட்டிய கலவன் | .. அரசினரது சகாயம்பெறும் | வெஸ்லியன் |
| | கெதறபத்துவ. | |
| கஹம்பிலியாவழ ஆண் | .. அரசாட்சி .. | — |
| | கந்துபிட்டபத்து. | |
| கொட்டபொழ ஆண் | .. அரசாட்சி .. | — |
| கொட்டபொழ பெண் | .. டிை .. | — |
| பின்தெனிய ஆண் | .. டிை .. | — |
| கெட்டியாமுல்ல | .. அரசாட்சி .. | — |
| யன்னாபான கலவன் | .. அரசினரது சகாயம்பெறும | ரோமன் கத்தோலிக் |
| அட்டுகொடை கலவன் | .. டிை .. | சலவேசன் ஆர்மி |
| மள்வான ஆண் | .. டிை .. | டிை |
| | கிரவெலிபத்து. | |
| தெடிகம ஆண் | .. அரசாட்சி .. | — |
| தெடிகம பெண் | .. டிை .. | — |
| வேரகல ஆண் | .. டிை .. | — |
| அம்பேபுஸ்ஸ ஆண் | .. டிை .. | — |
| தொறவக ஆண் | .. டிை .. | — |
| அள்கம மெதகம ஆண் | .. டிை .. | — |
| அமபேபுஸ்ஸ பெண | .. அரசினரது சகாயம்பெறும் | ரோமன் கத்தோலிக |
| அத்நாவழ கலவன் | .. டிை .. | பிரன்ஸிசன் |
| | கந்தொழகபத்து. | |
| வழகம ஆண் | .. அரசாட்சி .. | — |
| ஹெலமடை ஆண் | .. டிை .. | — |
| ஹத்நாகொடை கலவன் | .. டிை .. | — |
| வழகம பெண் | .. அரசினரது சகாயம்பெறும் | ரோமன் கத்தோலிக் |
| பாணகாவ கலவன் | .. டிை .. | டிை |
| | அட்டுளுகம்கோறளை. | |
| அட்டுளுகம ஆண் | .. அரசாட்சி .. | — |
| தொணியகழ ஆண் | .. டிை .. | — |
| குறுகல்ல கலவன் | .. அரசினரது சகாயமபெறும் | ரோமன் கத்தோலிக் |
| தன்தூவ ஆண் | .. டிை .. | இரகசிய |
| தெஹிஓவிட்டி கலவன் | .. டிை .. | புத்து |
| | பரணவல்கோறளை. | |
| மாணியன்கம ஆண் | .. அரசாட்சி .. | — |
| வத்பெரிய ஆண் | .. டிை .. | — |
| | தெஹிகம்பள்கோறளை. | |
| றுவன்வல்லை ஆண் | .. அரசாட்சி .. | — |
| றுவன்வலலை பெண் | .. டிை .. | — |
| கழபிட்டமடை ஆண் | .. டிை .. | — |
| அம்திரிகழ ஆண் | .. அரசினரது சகாயம்பெறும் | புத்து |
| வஹறக்க ஆண் | .. டிை .. | புத்து |
| யட்டியன்தொட்டை கலவன் | டிை .. | புத்து |
| மத்தமகொடை ஆண் | .. டிை .. | புத்து |
| ஹத்தாகொடை ஆண் | .. டிை .. | இரகசிய |
| | கீழ்புலத்கம. | |
| கிதுள்கழ ஆண் | .. அரசாட்சி .. | — |
| யாகெல்லை ஆண் | .. டிை .. | — |
| தெதுகுழ ஆண் | .. டிை .. | — |
| கிதுள்கழ பெண் | .. அரசினரது சகாயம்பெறும் | இரகசிய |

[Regulations under the Buddhist Temporalities Ordinance, made by the District Committee of Matara.]

மாத்தறை டிஸ்திறிக்கு சபையாரால் 1905 ம் ௵ 8 ம் இலக்க புத்த தேவாலயவருவாய்க் கட்டளைச்சட்டத்தின் 12 ம் பிரிவினால் அவர்களுக்கு கொடுக்கப்படும் அதிகாரதஸ்தகொண்டு செய்யப்பட்ட பின்னால் வரும் விதிகள் தேசாதிபதியவர்களாலும் சட்டநிரூபணச் சபையாராலும் உவமதிக்கப்பட்டு இத்தால் சகலரு மறியும்படி பிரசித்தமாக்கப்படுகின்றன.

தேசாதிபதியவர்கள் கட்டளைப்படி,

கொலோனியல் சக்கிறத்தார் கந்தோர்,
கொழும்பு, 1913 ம் ௵ செப்றெம்பர்௴ 13 ௳.

எல். டபிள்யு. பூத்,
அக்றிங் கொலோனியல் சக்கிறத்தார்.

1905 ம் வருஷத்தின் 8 ம் இலக்க புத்த தேவாலயவருவாய்க் கட்டளைச்சட்டத்தின் 12 ம் பிரிவின் பிரகாரம் மாத்தறை டிஸ்திறிக்கு சபையாரால் செய்யப்பட்ட விதிகளாவன:—

1-வது. டிஸ்திறிக்கு சபையின் அங்கத்தவர்களுள் மூவர் சேர்ந்து ஒரு நிருவாக கூட்டமாகும். ஆனால் குறித்த கட்டளைச்சட்டத்தின் 17 ம் பிரிவின் பிரகாரம் தேவாலய பரிபாலனர் தெரிவில் சபைநாயகரும் டிஸ்திறிக் சபையின் அத்தேவாலய மிருக்குமிடத்திலுள்ள அங்கத்தவரும் சேர்ந்து ஒரு நிருவாக கூட்டமாவர்.

2-வது. டிஸ்திறிக்கு சபையின் கூட்டங்கள் வருடந்தோறும் தை, சித்திரை, ஆடி, ஐப்பசிமாசங்களின் முதல் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் சபைநாயகர் வாசம்பண்ணுமிடத்தில் அல்லது அவரால் குறிக்கப்படுமிடத்தில் நடத்தப்படவேண்டும். சபை அங்கத்தவருக்கு அவ்விடத்தைப்பற்றி குறைந்த கணக்கில் ஏழு நாள்களுக்குமுன் அறிவிக்க வேண்டியது.

3-வது. கூட்டத்தில் சபைநாயகரில்லா நேரத்தில் சபை அங்கத்தவருள் ஒருவர் சபைநாயகராக அத்தருணத்திற்கு தெரிவிடப்படவேண்டும்.

4-வது. பதினாறு நாள்களுக்கு குறையாத நொத்தீசு கொடுத்து ஒரு விசேட கூட்டம் கூட்டுவதற்கு சபைநாயகருக்கு அதிகாரமுண்டு. டிஸ்திறிக்கு சபை அங்கத்தவருள் இருவர் தக்க காரணம் காட்டி எழுத்தில் கேட்குமிடத்து சபைநாயகர் ஒரு விசேட கூட்டம் கூட்டலாம்.

5-வது. டிஸ்திறிக்கு சபைக்கூட்டத்தில் நடைபெறும் காரியங்களின் குறிப்புகள் எழுதப்பட்டு அடுத்த கூட்டத்தில் வாசிக்கப்பட்டு பெலப்புற்று அல்லது மறுவகை நடத்தப்பட்டு சபைநாயகரால் ஒப்பமிடப்படல் வேண்டும்.

6-வது. சபைக்கு ஒரு லிகிதரும், ஒரு சேவுகனும் வைக்கப்படும். அவர்களின் சம்பளம் பின்னால் தீர்மானிக்கப்படும்.

7-வது. தேவாலய பரிபாலனர் வருடந்தோறும் தைமாசம் ஆடிமாசத்தில் பதினைந்தாந் திகதியில் கட்டளைச்சட்டத்தின் 12 ம் பிரிவின்படி டிஸ்திறிக் கோட்டுக்கு அனுப்பப்படவேண்டிய அரை வருடக் கணக்குகொப்பி டிஸ்திறிக்கு சபைக்கு கொடுக்க வேண்டும்.

8-வது. யாதொரு தேவாலய பரிபாலனர் தனக்கு விரோதமாக சொல்லப்பட்ட குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுகளின் உறுதிப்பண்ணிய ஒரு கொப்பி கொடுக்கப்பட்டு அக்குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுகளுக்கு போதிய காரணம் காட்டி மறுமொழி கொடுக்காதிருந்தால், அவர் இல்லாமலிருக்கவே விசாரணை நடத்தப்படும். அப்படி அவரில்லாமலிருக்க விசாரணைசெய்து முடித்த தீர்ப்பினால் வருத்தமடையும் பரிபாலனர் தான் அவ்விசாரணைக்கு வராமலிருந்ததற்கு தகுந்த காரணம் காட்டி விசாரணையை திரும்ப நடத்தும்படி கேட்க உரித்துண்டு.

9-வது. ஒரு தேவாலயம் அல்லது விகாரையின் ஆதனத்தை அதன் பரிபாலனர் பொறுப்பில் கொடுக்கில் டிஸ்திறிக்கு சபை அங்கத்தவர் இரண்டு சாட்சிகளின் முகதாவிலும், தேவாலய உரித்தாளி முன்பாகவும் அவருக்கு கொடுக்கவேணும். இத்தோடு அணைக்கப்பட்டிருக்கும் மாதிரியில் மூன்று மாதிரிக்கொப்பிகள் எழுதி நிறைவேற்றி ஒன்று தேவாலய உருத்தாளருக்கும் ஒன்று பரிபாலனருக்கும் மற்றது சபைக்கும் கொடுக்கவேண்டும். தேவாலய நடப்புக்குத் தேவையாகும் பொருள்களை தேவாலய உருத்தாளருக்கு அவரிடத்தில் இரண்டு பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொண்டு ஒப்புக்கொடுக்கவேண்டும். அப்பற்றுச்சீட்டில் ஒன்று அப்பரிபாலனரே வைத்துக்கொள்ளவேண்டியது. மற்றது சபைக்கு கொடுக்கவேண்டியது.

10-வது. ஒவ்வொரு பரிபாலனரும் தான் பரிபாலனராகவிருக்கும் தேவாலயம் அல்லது விகாரையின்பேரால் அத்தேவாலய வருடாந்த வருமானத்திலிருந்து 100 க்கு 5 வீதமாகக் கணக்கிடப்பட்ட ஒரு தொகை கட்டளைச்சட்டத்தின் நிபந்தனைகளை நடத்தும் செலவுக்கு உதவிப்பணமாக அத்தேவாலயம் அல்லது விகாரையிருக்கும் டிஸ்திறிக்கு அங்கத்தவருக்கு மாசிமாதம் 28 ந் திகதிக்குமுன் கொடுக்கவேண்டும். டிஸ்திறிக்கு சபை அங்கத்தவர் அப்பணத்தை பங்குனிமாதம் 31 ந் திகதிக்குமுன் சபைநாயகருக்கு அனுப்பவேண்டும்.

மாதிரி A.

மாத்தறை டிஸ்திறிக்கு————க்கு சேர்ந்த அசைவுள்ள பொருளின் டாப்பு, தென் மாகாணம்.

| பொருளின் பெயர் | விலை | | உடன்சேர்கத்தில் பொருளின் நிறை | குறிப்புகள் |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | | |

மேலே காட்டிய டாப்பில் காணப்படும் பொருள்கள் சரிபார்க்கப்பட்டு அதில் சொல்லிய தேவாலய பரிபாலனருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டதென இதன்கீழ் கையொப்பகாறராகிய நாங்கள் இதனால் உறுதிப்பண்ணுகிறோம்.

தேவாலய உரித்தாளி.

சாட்சிகள்:—
1.
2.

டிஸ்திறிக்குசபை அங்கத்தவர்.

மேலே சொல்லப்பட்ட தேவாலய பரிபாலனராகிய இதன்கீழ் கையொப்பமிட்ட————ஆகிய நான் குறித்த தேவாலயத்துக்குடைய மேலே சொல்லப்பட்ட சாமான்களை ஏற்றுக்கொண்டதென இத்தால் அத்தாட்சிபண்ணுகிறேன்.

பரிபாலனர்.

191—ம் ௵————௴——௳.

11-வது. அப்படி ஏற்கப்பட்ட பணத்தை சபைநாயகர் ஒரு வங்கியில் கட்டிவைத்து சபையாரின் கட்டளைப்படி செலவுபண்ணி அச்செலவுக்கு ஒரு கணக்கு வைத்திருந்து சபையின் கூட்டத்தில் வைக்கவேண்டும்.

12-வது. தேவாலயத்துக்குடைய ஆதனத்தில் யாதும் கட்டிடங்களை அல்லது மரங்களை அகற்ற அல்லது யாதுங் கட்டிடங்களை கட்ட அல்லது பழுதுபார்ப்பதுக்குமுன் டிஸ்திறிக்கு சபையின் அனுமதிபெற வேண்டும்.

மாத்தறை டிஸ்திறிக்கு சபையின் கூட்டத்தில் 1913 ௵ சித்திரை௴ 5 ந் திகதி விதியாக்கப்பட்டது.

டொன் கொஸ்தன்,
சபைநாயகர்.

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

**No. 709, N. P.**—1913 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 4 ந் திகதி, 11 மணியளவில், தன் ஆபீசில், வட மாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது உரித்துமுடிவுபண்ணப்படும். 15 காணித்துண்டுகள், வட மாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் வடமறுட்சி கிழக்குப் பகுதியிலிருக்கின்றது.

பி. எஸ். சிவிருந் தெடுத்த பிளான் இலக்கம் 56. குறிச்சி—மருதங்கேணி.

| காணித்துண்டின் இல. | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம், ஏ. | று. | ப. | ஏக்கரொன்றின் பாணிப்புவிலை ரூ |
|---|---|---|---|---|---|---|
| 43 | செல்லையா பெண் வள்ளிப்பிள்ளை கூட்டிச்சேர்த்தது .. | தென்னந்தோட்டம் | 0 | 0 | 19 | .. 100 |
| 43a | எஸ். பொன்னையாவும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது .. | ஷ .. | 0 | 0 | 20 | .. 100 |
| 44 | எஸ். செல்லையாவும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது .. | ஷ .. | 0 | 0 | 23 | .. 100 |
| 45 | முருகர் கைம்பெண் சின்னப்பிள்ளை கூட்டிச்சேர்த்தது .. | ஷ .. | 0 | 0 | 30 | .. 100 |
| 46 | கே. கண்ணப்பனும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது .. | ஷ .. | 0 | 1 | 24 | .. 100 |
| 47 | எம். சடையரும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது .. | ஷ .. | 0 | 0 | 22 | .. 100 |
| 48 | எஸ். கணபதிப்பிள்ளையும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது | ஷ .. | 0 | 1 | 15 | .. 150 |
| 49 | எம். கணபதியும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது .. | ஷ .. | 0 | 1 | 16 | .. 150 |
| 50 | எஸ். நல்லதம்பிகூட்டிச்சேர்த்தது .. | ஷ .. | 0 | 0 | 10 | .. 25 |
| 50a | பெரியதம்பி கைம்பெண் முத்துப்பிள்ளை கூட்டிச்சேர்த்தது | ஷ .. | 0 | 0 | 14 | .. 100 |
| 51 | வி. கந்தப்பனும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது .. | ஷ .. | 0 | 1 | 8 | .. 100 |
| 52 | கே. கண்ணப்பனும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது ... | தென்னந்தோட்டம் | 0 | 0 | 27 | .. 100 |
| 52a | ரி. சின்னத்தம்பியும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது .. | பனம் தோட்டம் .. | 0 | 0 | 19 | .. 100 |
| 52b | கே. குமாரசுவாமி கூட்டிச்சேர்த்தது .. | தென்னையும் பனையும் .. | 0 | 0 | 30 | .. 100 |
| 52c | ஆனந்தர் கைம்பெண் கறுப்பாத்தை கூட்டிச்சேர்த்தது .. | ஷ .. | 0 | 0 | 24 | .. 100 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் வட மாணத்து கவுண்மேந்து ஏஜன்றுத்துரையவர்களிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரையிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபீசில்,
கொழும்பில், 1913 ம் ஹு புரட்டாதிமீ 10 ந் உ.

எல். டபிள்யு. பூத்,
எக்றிங் கொலோனியல் சக்கிறத்தார்.

---

**No. 1,347, E. P.**—1913 ம் ஆண்டு ஐப்பசிமாதம் 15 ந் திகதி, புதன்கிழமை, பிற்பகல் 1 மணிக்கு, கிழக்கு மாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்கள் தனது ஆபிசில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்பார். காணித்துண்டுகள், கிழக்கு மாகாணத்து மட்டக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 4,556. எருவில்பற்று. குறிச்சி—ஒந்தாச்சிமடம்.

| காணித்துண்டின் இல. | கேள்விக்காரனின் பெயர். | உரித்தாளியின் பெயர். | விபரம். | விசாலம், ஏ. | று. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1869 | பொதுவிற்பனவு .. | முடிக்குரிய .. | தென்னைக்கேற்ற வெட்டைப்பூமி .. | 0 | 2 | 16 | .. 15 |
| 1870 | ஷ .. | ஷ .. | ஷ .. | 0 | 1 | 8 | ... 15 |
| 1871 | க. வ. கிட்ணபிள்ளை .. | கூட்டிப்பிடித்தது .. | தென்னந்தோட்டம் | 0 | 2 | 23 | .. 132 |
| 1872 | க. தில்லையம்பலம் .. | ஷ .. | ஷ .. | 0 | 1 | 3 | .. 168 |
| 1873 | சி. கதிரமலை .. | ஷ .. | ஷ .. | 0 | 0 | 17 | .. 157 |
| 1874 | பொதுவிற்பனவு .. | முடிக்குரிய .. | தென்னைக்கேற்ற வெட்டைப்பூமி .. | 0 | 2 | 5 | .. 15 |
| 1875 | வே. போ. த. சேதுனுதர் .. | கூட்டிப்பிடித்தது .. | தென்னந்தோட்டம் | 2 | 3 | 15 | .. 44 |
| 1876 | க. வைரமுத்து .. | ஷ .. | ஷ .. | 0 | 1 | 26 | .. 81 |
| 1877 | மு. முத்துசாமி .. | ஷ .. | ஷ .. | 0 | 1 | 22 | .. 93 |
| 1878 | ரோட்டுக்காக விடப்பட்ட பூமி .. | முடிக்குரிய .. | வெட்டை .. | 0 | 0 | 12 | .. — |
| 1879 | இ. சந்திரப்பிள்ளை .. | கூட்டிப்பிடித்தது .. | தென்னந்தோட்டம் | 0 | 2 | 0 | .. 99 |
| 1880 | நா. சீனித்தம்பி .. | ஷ .. | ஷ .. | 0 | 1 | 33 | .. 199 |
| 1881 | ரோட்டுக்காக விடப்பட்ட பூமி .. | முடிக்குரிய .. | வெட்டை .. | 0 | 0 | 9 | .. — |
| 1882 | ந. காத்தமுத்து .. | கூட்டிப்பிடித்தது .. | தென்னந்தோட்டம் | 0 | 2 | 12 | .. 134 |
| 1883 | ரோட்டுக்காக விடப்பட்ட பூமி .. | முடிக்குரிய .. | வெட்டை .. | 0 | 0 | 8 | .. — |
| 1884 | க. நாகமணி .. | ஷ .. | தென்னந்தோட்டம் | 0 | 0 | 35 | .. 93 |
| 1885 | ரோட்டுக்காக விடப்பட்ட பூமி .. | ஷ .. | வெட்டை .. | 0 | 0 | 7 | .. — |
| 1886 | க. வ. கிட்ணபிள்ளை .. | கூட்டிப்பிடித்தது .. | தென்னந்தோட்டம் | 1 | 1 | 14 | .. 53 |
| 1887 | ஷ .. | ஷ .. | ஷ .. | 0 | 1 | 32 | .. 126 |
| 1888 | ரோட்டுக்காக விடப்பட்ட பூமி .. | முடிக்குரிய .. | வெட்டை .. | 0 | 0 | 4 | .. — |
| 1889 | பொதுவிற்பனவு ... | ஷ .. | தென்னைக்கேற்ற வெட்டைப்பூமி .. | 0 | 2 | 23 | .. 15 |
| | படம் 1,672. கோறளைப்பற்று. குறிச்சி—கல்குடா. | | | | | | |
| 4900 | வே. மு. அ. சிவப்பிரகாசம் .. | வாயிதா கட்டத்தவறியவர் .. | சேனை .. | 12 | 3 | 9 | .. 17·50 |
| 4902 | ஷ .. | ஷ .. | ஷ .. | 15 | 1 | 32 | .. 15 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் கொந்திசுகளைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களிடம் வினவியறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபீசில்,
கொழும்பில், 1913 ம் ஹு செப்றெம்பர்மீ 4 ந் உ.

எல். டபிள்யு. பூத்,
எக்றிங் கொலோனியல் சக்கிறுத்தார்.

No. 1,348, E. P.—1913 ம் ஆண்டு அற்பசிமாதம் 28 ந் திகதி, செவ்வாய்க்கிழமை, பிற்பகல் 1 மணிக்கு மூதூர் வாடிவீட்டில் கீழ் மாகாணத்து திரிகோணமலை உதவி கவற்ணமேந்து ஏசென்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற் கூறி விற்கப்படும். 28 காணித்துண்டுகள், கீழ் மாகாணத்து திரிகோணமலை டிஸ்திறிக்கின் கொட்டியாரப்பகுதியிலிருக்கின்றது.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. றூ. ப. | ஏக்கர் ஒன்றின் பாணிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 4,461. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 1393 | பட்டித்திடல் | .. பீ. கணவதி | .. நெற்கேற்ற | . 1 0 19 | .. 15 |
| 1394 | ஷை | .. — | .. ஷை | .. 0 2 33 | .. 15 |
| 1396 | ஷை | .. அருணசலம் சின்னப்பொடியர் | ஷை | . 6 2 4 | .. 15 |
| | | பிளான் இலக்கம் 4,468. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 1435 | தோப்பூர் | .. எஸ். மாம்சாய்பு | .. தென்னைக்கேற்ற | 5 0 20 | .. 21 |
| | | பிளான் இலக்கம் 4,486. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 1508 | இலந்தைதுறை | .. எம். கணபதிப்பிள்ளை | .. தென்னைக்கேற்ற | 2 2 9 | ... 17·50 |
| | | பிளான் இலக்கம் 4,515. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 1672 | தோப்பூர் | .. — | .. நெற்கேற்ற | .. 0 3 9 | .. 15 |
| | | பிளான் இலக்கம் 4,519. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 1689 | ஈச்சிலம்பத்தை | .. — | .. நெற்கேற்ற | .. 1 1 8 | .. 15 |
| 1690 | ஈச்சிலம்பத்தை | .. — | .. நெற்கேற்ற | .. 3 1 8 | .. 15 |
| 1691 | ஷை | .. — | .. ஷை | .. 1 3 15 | .. 18 |
| 1693 | ஷை | .. — | .. ஷை | .. 0 1 0 | .. 18 |
| 1694 | ஷை | .. — | .. ஷை | .. 0 1 18 | ... 18 |
| 1695 | ஷை | .. இ. செல்லையா | .. ஷை | .. 6 0 29 | .. 15 |
| 1696 | ஷை | .. — | .. ஷை | .. 1 2 22 | .. 15 |
| 1698 | ஷை | .. — | .. ஷை | .. 1 3 3 | .. 15 |
| 1699 | ஷை | .. — | .. ஷை | .. 4 0 14 | .. 15 |
| | | உரித்தாளி—பெ. காளியப்பன். | | | |
| 1700 | ஷை | .. — | .. ஷை | .. 0 1 35 | ... 18 |
| | | உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 1701 | ஷை | .. — | .. ஷை | .. 3 1 33 | .. 15 |
| | | உரித்தாளி—வெ. மூத்ததம்பி. | | | |
| 1702 | ஷை | .. — | .. ஷை | .. 4 3 18 | .. 15 |
| | | உரித்தாளி—எஸ். மூத்ததம்பி. | | | |
| 1703 | ஷை | .. — | .. ஷை | .. 3 3 38 | .. 17·50 |
| | | உரித்தாளி—பெ. காளியப்பன். | | | |
| 1704 | ஷை | .. — | .. ஷை | .. 3 3 27 | .. 18 |
| 1705 | ஷை | .. — | .. ஷை | .. 4 2 5 | .. 15 |
| | | உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 1706 | ஷை | .. — | .. ஷை | .. 3 3 35 | .. 17·50 |
| 1707 | ஷை | .. — | .. ஷை | .. 3 2 18 | .. 15 |
| 1708 | ஷை | .. — | .. ஷை | .. 3 3 26 | .. 15 |
| | | உரித்தாளி—சின்னத்தம்பி. | | | |
| 1709 | ஷை | .. — | .. ஷை | .. 1 2 28 | .. 18 |
| | | பிளான் இலக்கம் 4,571. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 1939 | ஆனைத்தீவு | .. எஸ். பத்தகுட்டி | .. நெற்கேற்ற | .. 6 2 8 | .. 15 |
| 1940 | ஷை | .. — | .. ஷை | .. 9 3 14 | .. 15 |
| 1941 | ஷை | .. — | .. ஷை | .. 19 1 16 | .. 15 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் திரிகோணமலை உதவி ஏசென்றுத்துரையவர்களிடத்திலும் படங்களைப்பற்றிய விபரங்கள் அளவைத் தலைவரிடத்திலுமிருந்து அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபீசில்,
கொழும்பில், 1913 ம் ஷு செப்றெம்பர்மீ 10 ந் உ.

எல். டபிள்யு. பூத்,
எக்றிங் கொலோனியல் சக்கிறத்தார்.

---

# LAND ACQUISITION NOTICES.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Kalawana, Ratnapura District.]

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கலவான ஆண்பிள்ளைகளின் பள்ளிக்கூடத்திற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 2,371. குறிச்சி—கலவான.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| D 29 | உறுள்ககலகந்தகேன அல்லது கறமில்லஎலகாவகேன .. | மரஞ்செடியில்லா நிலம் .. | கே. எம். வண்டா கோறளே .. | 0 2 8·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆல-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1913 ம் ஆல ஐப்பசிமீ 12 ந் தேதியிலன்று பின்னேரம் 2 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1913 ம் ஆல புரட்டாதிமீ 13 ந் உ.

ஆர். என். தேன்,
அரசாட்சி ஏசண்டு.

---

[Kalawana, Ratnapura District.]

1876 ம் ஆல-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கலவானையில் ஆசுபத்திரியும் டாக்குத்தருக்கு வீடுங் கட்டுதலுக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதம படத்து இலக்கம் 2,355. குறிச்சி—கலவானை.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| V 28 | உருள்கத்தறஒகர்தகேன அல்லது கறமில்லஎல்லகாவகேன .. | காடு வெட்டின நிலம் .. | கே. எம். வண்டா கோறளை .. | 0 2 8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆல-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1913 ம் ஆல ஐப்பசிமாசம் 13 ந் தேதியிலன்று பின்னேரம் 2 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1913 ம் ஆல புரட்டாசிமீ 13 ந் உ.

ஆர். என். தேன்,
அரசாட்சி ஏசண்டு.

---

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

### உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Colombo Notice No. 5,006.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள், 1913 ம் ஆல (செப்றெம்பர்) புரட்டாதிமீ 19 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக் கச்சேரியில் கொழும்பு நீர்கொழும்பு டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் அல்லது எழுத்து மூலமாக தெரிபட்டு சொல்லப்பட்ட காணிக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணி உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

எச். டபிள்யு. மிலிகன்,
உதவி அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட காணிகளின் விபரம்.

மேல் மாகாணம் நீர்கொழும்பு டிஸ்திறிக் கப்பிற்றிகாம் கோறளை உடுகாபற்று வோத்தளை என்னும் கிராமத்தில் இத்துடன் அனைத்திருக்கும் *படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்குறிக்குங் காணித்துண்டு.

பிரதமபட இலக்கம் 15,312.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 4824 .. | தெற்றுகால்கந்த (ஓர் காலடி பாதைக்காக சேமிக்கப்பட்டது) .. | 0 0 20 |

எல்லைகள் : வடக்கு-243,546 ம் உரிமைப்படத்தில் காட்டப்படும் காணி; கிழக்கு-முடியினால் பனவாலையிலிருக்கும் கெனறத் பத்திறனலாகே பீரிஸ் அப்புகாமிக்கு விற்கப்பட்ட தெற்றுகல்கந்த; தெற்கு-தெற்றுகல்கந்த, முடிக்குரிய காடு; மேற்கு-பனவாலையிலிருந்து வோத்தாளைக்கு போகும் தெருவால்.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 1351 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[Colombo Notice No. 5,007.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள், 1913 ம் ஆல (செப்றெம்பர்) புரட்டாதிமீ 19 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக் கச்சேரியில் கொழும்பு நீர்கொழும்பு டிஸ்திறிக உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் அல்லது எழுத்து மூலமாக தெரிபட்டு சொல்லப்பட்ட காணிக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

எச். டபிள்யு. மிலிகன்,
கொழும்பு நீர்கொழும்பு டிஸ்திறிக்கின் உதவி அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட காணியின் விபரம்.

மேல் மாகாணம் நீர்கொழும்பு டிஸ்திறிக் கப்பிற்றிகாம் கோறளை உடுகாபற்று வோத்தளை என்னுங் கிராமத்தில் இத்துடன் அணைத்திருக்கும் *படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்குறிக்குங் காணித்துண்டு.

பிரதமபட இலக்கம் 15,316.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | விசாலம், ஏ. று. ப |
|---|---|---|---|---|---|
| 1841 | .. | திரிவானகொடல்ல (முடியினல் சேமிக்கப்பட்டது) | .. | .. | 0 1 32 |

எல்லைகளாவன: வடக்கு-டன் கொன்ஸ்டன்டீன் குனவாடினவால் உரித்தாடப்படும் தம்புகாவத்தை; கிழக்கு-263,209 ம், 263,320 ம் உரிமைப்படங்களில் காட்டப்படும் காணிகளாலும், பிரிசாலை என்னும் கிராமத்தின் எல்லையாலும்; தெற்கு-திரிவானகொடல்ல முடிக்குரிய காடு, முடியினல் வோத்தாலையிலிருக்கும் கறுனரெத்தின விக்கிறமசின்க முடியசெலாகே டன் மார்திலிஸ் பெறயிறவுக்கு விற்கப்பட்ட திரிவனகொடல்ல; மேற்கு-திரிவானகொடல்ல, முடிக்குரிய காடு.

* இங்கிலிசின் நான்காம் பாகம் 1352 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[Colombo Notice No. 5,008.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர் சொல்லப்படும் காணிகளிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானல், அவர்கள், 1913 ம் ஸெ (செப்றெம்பர்) புரட்டாதிமீ 19 ந் திகதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக் கச்சேரியில் கொழும்பு நீர்கொழும்பு டிஸ்திறிக்கின் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் அல்லது எழுத்து மூலமாக தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களினல் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி அல்லது காணிகள் முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

எச். டபிள்யு. மிலிகன்,
உதவி அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட காணிகளின் விபரம்.

மேல் மாகாணம் நீர்கொழும்பு டிஸ்திறிக் கப்பிற்றிகாம் கோறளை யற்றிகாபற்று வோகொலகம கிராமத்தில் இத்துடன் அணைத்திருக்கும் *படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதம பட இலக்கம் 15,216.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|
| 4510 | .. | கொறக்ககாலன்தை (முடியினல் சேமிக்கப்பட்டது) | .. | .. | 0 1 9 |
| 4511 | .. | ஷை ( ஷை ) | .. | .. | 0 3 30 |
| 4513 | .. | ஷை ( ஷை ) | .. | .. | 0 0 15 |
| 4514 | .. | ஷை ( ஷை ) | .. | .. | 0 0 24 |
| | | | | | 1 1 38 |

எல்லைகளாவன: வடக்கு-52,742 ம் உரிமைப்படத்தில் காட்டப்படும் காணி; கிழக்கு-52,742 ம் உரிமைப்படத்தில் காட்டப்படும் காணி, முடியினல் அமறசின்பெடிகே கிறியாவில் தீர்த்துவிடப்பட்ட கொறக்ககாலந்தையும், 175,380 ம் உரிமைப்படத்தில் காட்டப்படும் காணி; தெற்கு-175,581 ம் உரிமைப்படத்தில் காட்டப்படும் காணி; மேற்கு-வியல்லப் பெடிகே கப்புவாவாலும் மற்றவர்களாலும் உருத்தாடப்படும் கீனகாகும்புற, பொலிஸ் துறையா அமறசின்க வண்டியாலும் மற்றவர்களாலும் உரித்தாடப்படும் பகாலகாகும்புற.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 1353 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[Colombo Notice No. 5,009.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண்நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணி அல்லது காணிகளில் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானல், அவர்கள், 1913 ம் ஸெ (செப்றெம்பர்) புரட்டாதிமீ 19 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக் கந்தோரில் மேல் மாகாண கொழும்பு நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் முகமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது ஒன்றிலேனுக்கும் அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களினல் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்டவர்கள் முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

எச். டபிள்யு. மிலிகன்,
உதவி அரசாட்சி ஏசென்று.

குறிக்கப்பட்ட காணிகளின் விவரம்.

இருக்குமிடம்: மேல் மாகாணத்தைச்சேர்ந்த கொழும்பு டிஸ்திறிக்கிலிருக்கும் ஸிவாகண் கோறளையில் மெடாபற்று பாதுக்கையில் :—

பிரதம படம் 14,630.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|
| 2123 | .. | கலகண்டலன்தை (ஓர் தெருவுக்காக சேமிக்கப்பட்ட நிலம்) | .. | .. | 0 0 27 |
| 2126 | .. | ஷை ( ஷை ) | .. | .. | 0 0 1 |
| | | | | | 0 0 28 |

எல்லைகள்: வடக்கு-கலனபன்சாலையில் உரித்தாடப்படும் கலினுபன்சலவத்தை; கிழக்கு-முடியினுலும், மாவலகேடன் அகிறிஸ் ஜயவாடின விதானே ஆருச்சியாலும் உரித்தாடப்படும் கல்கன்டலன்தை, முடியினுலும் டன் அகிறிஸ் ஜயவாடின விதானே ஆருச்சி உரித்தாடப்படும் கல்கன்தலன்தை, டி. எச். ஜயவாடினவால் உரித்தாடப்படும் கல்கன்தலன்தை; தெற்கு-முடியினுலும் எம். டன் சீமான் ஜயவாடினவாலும் உரித்தாடப்படும் கல்கன்தலந்தை, முடியினல் உரித்தாடப்படும் கல்கன்தலன்தை, சவக்காலையால்; மேற்கு-கன்சபாவ தெருவினல்.

* இங்கிலிசின் நான்காம் பாகம் 1353 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Tenders for the Transport of Salt to Udappu.]

1913 ம் ஆண்டு ஐப்பசிமீ 12 ந் தேதி துவங்கி 1914 ம் ஆண்டு சித்திரைமாதம் 30 ந் தேதிவரைக்கும் மீனுணர்த்துங் காலங்களில் புத்தளம் உப்புக் குதங்களிலிருந்து உப்பு ஏற்றுமதிபண்ணிக் கொண்டுபோய் உடப்பு குதத்துக்கு நிறுத்து நிறைத்துக் கொடுக்கிறதற்கென்று மேல் உரையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றுத்துரையவர்களால் 1913 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 25 ந் தேதி, பகல் 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விக்காரன் இதன்பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டும் :—

(*a*) கேள்விக்காரன் 1913 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 24 ந் தேதிக்கு முன்னே புத்தளம் கச்சேரியில் ரூபாய் 5 (ஐந்து) கட்டவேண்டும். நியமிக்கும் ஞாயமான நாளைக்குள் பொருத்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினால் இந்தக்கட்டின பணம் கொவற்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும்.

(*b*) கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோந்த வருமான விசாரணைத் தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றுத்துரையவர்களுக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தவ்வால் வளியாக அனுப்பவேண்டும்.

(*c*) கொந்தீஸ் அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்விக்காரர் தங்களுடைய பெயரையும் தாங்களிருக்கு மிடத்தையும் புத்தளத்தில் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

(*d*) புத்தளத்திலிருந்து 280 அந்தர் உப்பு ஏற்றி உடப்புக்குப்போகும் ஒவ்வொரு போட்டுக்கும் என்ன கூலியென்று கேள்விக்காரர் காட்டியிருக்கவேண்டியது.

இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விளம்பரங்களை உப்புத்துரையவர்களிடம் வினவி அறிந்துகொள்ளலாம்.

சி. குமாரசுவாமி,
உதவி ஏசன்றுத்துரைக்காக.

புத்தளம் கச்சேரி,
1913 ம் ௵ புரட்டாதிமீ 1 ந் தேதி.

---

[Tenders for supplying Palmayra Ola Mats for Northern and Southern Depôt, Kalpitty and Nachchikali Salt Stores, Puttalam.]

1913 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 1 ந் திகதி துவக்கம் 1914 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 30 ந் திகதி வரைக்கும் புத்தளத்திலுள்ள வட குதத்துக்கும் தென் குதத்துக்கும் கற்பிட்டி நாச்சிக்களியிலிருக்கிற உப்புக் குதங்களுக்கு 1,500 பனைஓலைப்பாய் கொடுக்கவென்று மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஒப்பந்தம்பண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களால் 1913 ம் ஆண்டு புரட்டாதிமீ 27 ந் திகதி சாயந்தரம் 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோந்த கணக்கு காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களுக்கும் கேள்விக்காரன் தபால் வழியாக அனுப்பவேண்டும்.

3. 1913 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 26 ந் திகதியன்று அல்லது அதற்குமுன் புத்தளம் கச்சேரியில் ரூபா 20 கட்டவேண்டும். நியாயமான காலத்துள் பொருந்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினால் இந்த கட்டின பணம் பறிமுதலாக்கப்படும்.

4. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடன் புத்தளம் உதவி அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களுக்கு மாதிரிக்கு ஒரு பனைஓலைப்பாய் அனுப்பவேண்டும்.

5. இந்தக் கொந்திறுத்தைச் சரியாக நடத்துவதற்காகப் பிணைக்கு ஏற்படுகிற இரண்டு போதிய ஆட்களால் கையொப்பமிட்டவர்களின் மேல்விலாசமும் எழுதப்பட்ட கடிதமொவ்வொரு கேள்விப்பத்திரத்துடனு மிணைத்திருக்க வேண்டியது.

6. எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் அல்லது எதையும் யாதாமொரு கேள்வியில்லாமல் தள்ளிப்போடுகிறதற்கு அரசாட்சியாருக்கு தத்துவமுண்டு.

7. புத்தளம் கச்சேரியில் எழுதிக்கேட்டால் கேள்விப்பத்திரம் கொடுக்கப்படும்.

8. இன்னு மிதைப்பற்றிய விபரங்கள் புத்தளம் உப்புத்துரை யவர்களிட மறிந்துகொள்ளலாம்.

ஜே. கொன்ரேய்,
உதவி அரசாட்சி ஏசன்றுத்துரை.

புத்தளம் கச்சேரி,
1913 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 4 ந் திகதி.

---

[Tenders for supplying Materials to Salt Department, Puttalam.]

1913 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 1 ந் திகதி துவக்கம் 1914 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 30 ந் திகதி வரைக்கும் புத்தளம் உப்பு டிப்பாற்மென் பாவிப்புக்காக இதனோடு அணைக்கப்பட்டிருக்கும் டாப்பின் குறிக்கப்பட்ட சாமான்களைக் கொடுப்பதற்காகவென்று மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி அரசாட்சி ஏசண்டுத்துரையவர்கள் 1913 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 23 ந் திகதி 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளுவார்.

2. கேள்விக்காரர் 1913 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 22 ந் திகதியிலன்று அல்லது அதற்குமுன் புத்தளம் கச்சேரியில் ரூபாய் 10 கட்டவேண்டும். உதவி அரசாட்சி ஏசன்றுத்துரையால் நியமிக்கும் நியாயமான காலத்துக்குள் பொருத்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினால் இந்தக் கட்டின பணம் அரசாட்சிக்கு பறிமுதலாக்கப்படும்.

3. அறிவித்தல் அல்லது கடிதங்களை பெற்றுக்கொள்ளுகிறதற்காக ஒவ்வொரு கேள்விக்காரரும் புத்தளத்தில் ஓரிட விலாசம் கொடுக்கவேண்டும்.

4. இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரங்களை புத்தளம் உப்புத்துரையவர்களிடம் வினவி அறிந்துகொள்ளலாம்.

ஜே. கொன்ரேய்,
உதவி அரசாட்சி ஏசண்டுத்துரைக்காக.

புத்தளம் கச்சேரி, 1913 ம் ௵ புரட்டாதிமீ 4 ந் வ.

---

டாப்பில் குறிக்கப்பட்ட சாமான்கள்.

தேங்காய் எண்ணெய் கலன் ஒன்றுக்கு.
மண்ணெண்ணெய் கலன் ஒன்றுக்கு.
ஆயுதம் மினுக்கும் கல்லு ஒன்றுக்கு.
கயிற்றுமுடி நூற்றுக்கு.
புள்ஸ் ஐ லாம்புதிரி யார் ஒன்றுக்கு.
ஈக்கில் விளக்குமார் ஒன்றுக்கு.
சேண்ட்பேப்பர் கடதாசி டசின் ஒன்றுக்கு.
நூல்கட்டை ஒன்றுக்கு.
ஊசி ஒன்றுக்கு
றுவயின்களிநூல் ஒன்றுக்கு.
துவாய் டசன் ஒன்றுக்கு.
புளி ஒருத்தல் ஒன்றுக்கு.
விளக்கெண்ணெய் கலன் ஒன்றுக்கு.
தார் கலன் ஒன்றுக்கு.

[Supreme Court Criminal Sessions at Colombo.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங்கோட்டாரால் கொழும்பு டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1913 ம் ஆண்டு ஒக்டோபர்மாதம் 10 ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
டபிள்யு. ட லிவேரு,
டிப்பியுட்டி பிஸ்கால்.

பிஸ்கால் கந்தோர்,
1913 ம் ௵ செப்டம்பர் ௴ 11 ந் ௳

[Supreme Court Criminal Sessions for Ratnapura at Colombo.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் இரத்தினபுரி டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1913 ம் ஆண்டு அற்பசிமாதம் 10 ந் திகதியாகிய வெள்ளிகிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
ஆர். என். தேன்,
பிஸ்கால்.

இரத்தினபுரி பிஸ்கால் கந்தோர்,
1913 ம் ௵ புரட்டாதி ௴ 13 ந் ௳.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.